


அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com


அ.எண் : 190/2016
தேதி : 20.12.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பாரத பிரதமர் அவர்களிடம் அளித்த அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றித்தரவேண்டும்.**
**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

பாரத பிரதமர் அவர்களிடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் 29 அம்ச கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளார். மாநில அரசின் வளர்ச்சிக்காகவும், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களுக்கு "பாரத ரத்னா" விருது மற்றும் பாராளுமன்றத்தில் முழு உருவ வெண்கல சிலை அமைப்பது போன்ற நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித்தரவேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 12 ஆம் தேதி அன்று தமிழகத்தின் வடமாவட்டங்களில் 140 கி.மீ வேகத்தில் வீசிய வார்தா புயலால், சென்னை உட்பட வடமாவட்டங்கள் பெரும் பாதிப்பை சந்தித்தது. இந்த பெரும் பாதிப்பை சமாளிக்க புயல் நிவாரண நிதியாகவும், மீட்புப்பணிக்காகவும் ரூ.22,573 கோடி அளிக்க வேண்டும் என்றும், அவர் அளித்த கோரிக்கைகளில் குறிப்பிட்டுள்ளார்.

சிறந்த, வலிமைமிக்க, தன்னுடைய கடைசி மூச்சு இருக்கும்வரை தமிழகத்திற்காகவும் அதன் முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்து வந்த முதலமைச்சர் புரட்சிதலைவியை இழந்து தவிக்கும் தமிழகத்துக்கு, ஆறுதல் அளிக்கும் விதமாக, இந்த கோரிக்கைகளை நிறைவேற்றி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தற்போது 2015 ஆம் ஆண்டு முதலே தமிழ்நாட்டில் தட்பவெட்ப சூழ்நிலை காரணமாக பருவ மழை பொழிய வேண்டிய காலத்தில் வரவில்லை. வானிலையில் பாதகமான மாற்றங்கள் நிலவுவதால், தட்பவெட்ப சூழ்நிலையும் மாறியுள்ளதால், தமிழ்நாட்டில் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நதிநீர் பிரச்சனை தீர்வு சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் அனைத்தும் தமிழகத்துக்கு நியாயமான முறையில் அமைய உறுதிசெய்ய வேண்டும்.

வரும் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாகவே, தமிழரின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நடைபெறுவதற்கான தடையை சட்டரீதியாக நீக்கி, ஜல்லிக்கட்டு நடைபெறுவதற்கு வழிவகை செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட துறைக்கு உத்தரவிடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்